**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

**O.S.No.60/2021**

PW1– கீதா நாள்.23.10.2024

**3, 4 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் வழக்கு சொத்தில் சோளம் விதைத்திருக்கிறேன். விவசாயத்தில் எல்லா செலவும் போக எவ்வளவு மீதம் வரும் என்று எனக்கு தெரியாது. நான் விவசாயம் செய்யவில்லை. ஒரு ஏக்கருக்கு ரூ.10,000/- வருமானம் என்றால் சரியல்ல. குறைவாக தான் வரும். ரூ.7,50,000/- கட்டாமல் இருந்திருந்தால் வங்கி சொத்தை ஏலத்திற்கு விட்டிருக்கும் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் தொகையை வங்கி மூலமாக தான் என் கணக்கில் கொடுத்தார்கள் என்றால் சரிதான். என் நடத்தை சரியில்லை என்று என்அம்மா வழக்கில் குறிப்பிட்டது பற்றி முதல் விசாரணையில் சொன்னதற்கு நான் மறுதலிக்கவில்லை என்றால் சரியல்ல. 26.07.2021ல் ஏற்பட்டகிரய ஆவணமும், 27.07.2021ல் ஏற்பட்ட கிரய ஒப்பந்த ஆவணமும் சட்டப்பட்ட செல்லத்தக்கது என்றால் சரியல்ல. பழனிவேல் போட்ட அசல் வழக்கு எண்.6/2022 வழக்கு படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிடை பாத்தியம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.60/2021ல் கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு ஆதராவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.